**STC 4301 /2023 தேதி 21-08-2025**
**பு.சா.1 தங்கமணி த/பெ ஜெயசீலன் என்பவரது குறுக்கு விசாரணை:-**

நான் புகாரில் இந்த வழக்கு சம்மந்தப்பட்ட கொடுக்கல் வாங்கலை தவிர்த்து அதற்கு முன்பாக எதிரிக்கு நான் பணம் எதுவும் கொடுத்தாக எனது புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். 8.11.2016 அன்று எதிரி என்னிடம் ரூ.15,000/- பணம் வாங்கியிருந்தார் என்றால் சரிதான், ஆனால் தேதி நியாபகம் இல்லை. அவ்வாறு பணம் வாங்கியபோது எதிரி என்னிடம் நான்கு காசோலைகள் கொடுத்தார் என்றால் சரியல்ல. 8.11.2016 க்கு பின்னிட்டு ஒரு வாரம் கழித்து எதிரி என்னிடம் ரூ.5000/- பணம் வாங்கி இருந்தார் என்றால் எனக்கு தேதி நியாபகம் இல்லை ஆனால் ரூ.5000/- வாங்கினார். 5.4.2018 அன்று இந்த வழக்கு காசோலை எண்ணிற்கு முந்தைய காசோலை எண்.000022 என்ற காசோலை ரூ.30,000/- க்கு எனது வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் கடந்த 3.6.2022 அன்று எனது வங்கி கணக்கிற்கு எதிரி ரூ.4,900/- மும் , ரூ,100/- ம், 1.11.2022 அன்று ரூ.1000/- ம் 23.3.2023 அன்று ரூ.5000/- மும் எனது வங்கி கணக்கிற்கு அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். மேற்சொன்ன பணமும் அதோடு ரொக்கமாகவும் சேர்த்து மொத்தம் ரூ,55,000/- எதிரி எனக்கு கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல, அவர் ரொக்கமாக எனக்கு பணம் கொடுத்தது இல்லை. எதிரி என்னிடம் வாங்கிய மொத்தம் ரூ. 20,000/- பணத்திற்கு வட்டியோடு சேர்த்து அவர் ரூ.55,000/-கொடுத்த பின்பும் அவரிடம் பெற்றிருந்த காசோலைகளை அவர் கேட்ட போது அவை தொலைந்து போய்விட்டது என கூறிவிட்டு அந்த காசோலை வைத்து 7 ஆண்டுகள் கழித்து இந்த பொய்யான வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. நான் இருசக்கர வாகனம் வாங்கி விற்கும் தொழில் செய்து வருவதாக சொல்வதால் அதற்கு உரிமம் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. நான் சேலம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 இல் 6 காசோலை வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான் அது வேறு நபர்கள் மீது தாக்கல் செய்துள்ளேன். நான் இருசக்கர வாகனம் வாங்கி விற்கும் தொழில் செய்து வருவதாக சொல்வது பொய் என்றாலும் அரசு அனுமதி பெறாமல் சட்ட விரோதமாக பைனான்ஸ் தொழில் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. எதிரியிடம் இருந்து எனக்கு சேர வேண்டிய பணத்தை பெற்று கொண்ட பின்பும் அவர் பிணையத்திற்காக கொடுத்திருந்த காசோலையை வைத்து பணம் பறிக்கும் நோக்கில் பொய்யான வழக்கை தாக்கல் சேய்தேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் கூறியது போல் கடன் கொடுப்பதற்கு எனக்கு வருமானம் இல்லை என்றால் சரியல்ல.

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 21th August 2025

Signature of witness.

Taken down by me in the open Court. Read by the witness/accused to be correct.

Judicial Magistrate No.3, Salem.